DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.16/2021**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | ரேணுகா | Caste: | |
| Husband Name: | ஜெயச்சந்திரன் | Calling: | சமையலர், சத்துணவு, நீராவி மங்களம் |
| Village: | தோளூர், விளத்தூர் அஞ்சல் | Religion: | |
| Taluk: | பரமக்குடி | Age: | 35 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.12.2025

( 1,3 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டனர். 2, 5 எதிரிகள் ஆஜர் இல்லை .BNSS பிரிவு 355-ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.4,6 ஆவது எதிரிகள் ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் பரமக்குடி தாலுகா விளத்தூர் அஞ்சல் தோளூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி தருமர் மகன் ராகவன் என் சித்தப்பா, சாட்சி நல்லாள் மகன் ராகவன் என் சித்தப்பா. சாட்சி இராமமூர்த்தி என் அப்பா. சாட்சிகள் செல்வம், ரவி , ராமாயி, சோலையம்மாள், ரகுவரன் , வள்ளிமுத்து ஆகியோர்களை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன ஜெயச்சந்திரன் எனது கணவர் நான் பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சார்ந்தவள். எதிரிகளை தெரியும். 1ம் எதிரி பள்ளர் சமூகத்தை சார்ந்தவர். 2ம் எதிரி ராஜா கம்மாளர், 3ம் எதிரி கார்த்திக் தேவர், 4ம் எதிரி முனியசாமி நாடார், 5ம் எதிரி நரேஷ் ஆசாரி, 6ம் எதிரி ஆரோன் பள்ளன் சமூகத்தை சார்ந்தவர்கள். நான் தோளூர் கிராமத்தில் பிறந்து அனுப்பானடியை சேர்ந்த ஜெயச்சந்திரன் என்பவரை திருமணம் முடித்து

எங்கள் ஊரிலேயே வசித்து வந்தோம். சம்பவ காலத்தில் பரமக்குடி தேவேந்திரர் மகால் அருகில் உள்ள சாஸ்தா பர்னிச்சர் கடையில் வேலை பார்த்து வந்தேன். என் கணவர் துபாய் சென்றுவிட்டு சம்பவம் நடந்ததற்கு 25 நாட்களுக்கு முன்பு ஊருக்கு வந்து கொத்தனால் வேலை பார்த்து வந்தார். இறப்பதற்கு முன்பு சிவன்ராத்திரி அன்று என் கணவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை என் வீட்டு முன்பு நிறுத்திவிட்டு நாங்கள் தூங்கிவிட்டோம். காலையில் வந்து பார்த்தால் பைக்கை காணவில்லை. நாங்கள் விசாரித்தபோது என் வீட்டிற்கு அருகில் இருந்த சுப்பிரமணியன் என்பவர் எடுத்து சென்றது தெரிந்தது. அவரிடம் கேட்டபோது அவர் எடுக்கவில்லை என்று மறுத்துவிட்டார். பின்னர் ஒருநாள் தனது பைக்கை பாலன் நகர் முருகன் மகன் சேதுபதி என்பவர் எனது கணவர் பைக் ஓட்டி வருவதை பார்த்த என் கணவர் அவரிடம் எனது பைக்கை என்னிடம் தா என்று கேட்டார். அப்போது சேதுபதி என் கணவரிடம் சுப்பிரமணி பைக்கை கொடுத்துவிட்டு ரூபாய் 4000 வாங்கி சென்றுவிட்டார். அதை கொடுத்தால் பைக்கை திரும்ப தந்துவிடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். எனது கணவர் கையில் இருந்த ரூபாய் 1000 ஐ சேதுபதியிடம் கொடுத்துவிட்டு பைக்கை பெற்றுவிட்டு மீதமுள்ள ரூபாய் 3000 ஐ தந்துவிடுவதாக சொல்லிவிட்டு வந்துள்ளார். அந்த பணம் ரூபாய் 3000 ஐ கொடுக்க தாமதமானதால் சேதுபதி மற்றும் அவரது நண்பர்களான 5 பேரும் வந்து சுப்பிரமணியனிடம் நீ பைக்கை கொடுத்துவிட்டு ரூபாய் 4000 ஐ வாங்கி சென்றுவிட்டாய், ஜெயச்சந்திரன் ரூபாய் 1000 மட்டும் கொடுத்துவிட்டு பைக்கை எடுத்து சென்றுவிட்டான் . ஒழுங்கா ஜெயச்சந்திரனின் பணத்தை தரச்சொல்லு, இல்லையென்றால் நீ கொடு, கொடுக்கவில்லை என்றால் உன்னையும் கொல்லுவேன்,

ஜெயச்சந்திரனையும் கொல்லுவேன் என்று மிரட்டிவிட்டு சென்றார்கள். கடந்த 25.03.2021ம் தேதி எனது கணவர் மடந்தையில் உள்ள ராமையா வீட்டிற்கு கொத்தனார் வேலைக்கு போனார். அன்றைய தினம் 06.45 மணியளவில் என் கணவர் எனக்கு தொடர்பு கொண்டு உன்னை அழைத்து செல்ல வரவா என்று கேட்டார். வேண்டாம் நானே வந்துவிடுகிறேன் என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். வெகுநேரம் ஆகியும் என் கணவர் வீட்டிற்கு வரவில்லை. மறுநாள் 26.03.2021ம் தேதி பகல் 12.00 மணிக்கு என் சித்தப்பா ராகவன் போன் செய்து என் கணவர் பாலன் நகர் கூத்தப்பெருமாள் கோவிலுக்கு மேற்கே வேந்தோனி ரீச் கால்வாயின் வடக்கே முட்புதரில் என் கணவரின் இடது நெற்றி, மூக்கு, நெஞ்சு பகுதி ஆகிய இடங்களில் காயங்களுடன் இறந்துகிடப்பதாக தகவல் சொன்னார். உடனே நான், என் அப்பா, அம்மா அங்கு சென்று பார்த்தபோது மேலே சொன்ன காயங்களுடன் என் கணவர் இறந்துகிடந்தார். அங்கிருந்தபோது ராஜீவ் நகரை சேர்ந்த சேவியர் வந்தார். அவர் எங்களிடம் 25.03.2021ம் தேதி இரவு 10.30 மணியளவில் பொன்னையாபுரம் பாலத்திற்கு கீழே கண்ணதாசன் டீக்கடை அருகே எனது கணவரோடு எதிரிகள் ஆறு பேரும் சண்டை போட்டு கொண்டிருந்ததாகவும், நானும் இராமமூர்த்தியும் விலக்கிவிட்டு சென்றதாக சொன்னார். பின்பு எனது கணவரின் உடலை தனியார் ஆம்புலன்ஸ் மூலமாக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். எனது கணவர் சேதுபதிக்கு 3000 ரூபாய் கொடுக்காததால் அவர் நண்பர்களான 2 முதல் 6 எதிரிகளும் சேர்ந்து சுப்பிரமணியன் வீட்டிற்கு வந்து மிரட்டிவிட்டு சென்றதுபோலவே நைசாக அழைத்து சென்று மது குடிக்க வைத்து அடித்து கொன்றுள்ளதை

தெரிந்துகொண்டேன். இதுசம்பந்தமாக பரமக்குடி நகர் காவல்நிலையம் சென்று சேவியர் சொன்ன விவரத்தின்படி புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது. நான்தான் அதை கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1**. என் கணவர் வேலைக்கு செல்லும் போது வெந்தைய கலர் முழுக்கை சட்டை மற்றும் கருப்பு கலர் கைலி அணிந்து சென்றார். அதை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் காட்டப்படும் சட்டை மற்றும் கைலிதான் என் கணவர் வேலைக்கு செல்லும்போது அணிந்து சென்ற கைலி மற்றும் சட்டை ஆகும். அந்த கைலி மற்றும் சட்டை முறையே அ.சா.பொ.1, 2. இதுசம்பந்தமாக பரமக்குடி டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/-C. Mohanram<br>
Sessions Judge,<br>
Special Court for Trial of Cases Registered<br>
under SC/ST(POA) Act,<br>
Ramanathapuram.(FAC)